18, 4th Cross (Upstairs) Rainbow Nagar, Pondicherry 605 011

Phone: 0413-2210187 Cell. 9600824414

Web: www.dajoseph.com Email: deyeje@yahoo.com


கோதானம் பற்றிப் பார்ப்போம். தாவரங்களில் துளசி பறவைகளில் கருடன் என்பது போல் விலங்குகளில் பசு வைதிகத்தில் புனிதமாகக் கருதப்படுகிறது. எம்பெருமானும் பிராட்டியும் சகல தேவர்களோடு பசுவின் தேகத்தில் தங்கி யிருப்பதாகச் சாத்திரம் கூறுகிறது. பசுவின் பால் தயிர் வெண்ணெய் நெய் முதலியவை வைதிகச்சடங்குகளுக்கு உகந்தவை. ராமாவதாரத்தில் பெருமாள் த்ருடநேத்ரர் என்ற முனிவரின் ஆணைப்படி தங்கத்தில் பசு செய்து அதை ஒரு பிராம்மணருக்கு அவர் தானம் செய்ய, அந்தத் தங்கத்தை விற்று அந்த பிராம்மணர் கோயில் கட்டியதால் செம்பொன் செய் கோவில் என்று திருநாங்கூர் திவ்ய தேசத்துக்குப் பெயர் ஏற்பட்டதாகத் தலவரலாறு கூறுகிறது. காட்டுக்குப் புறப்படும் முன் தன் வனவாசம் செவ்வனே நிறைவேற வேண்டும் என்ற நோக்கத்தில் ஸ்ரீராமர் யாத்ராதானமாக ஒரு ஏழை அந்தணருக்குத் தன் கோசாலையில் உள்ள அனைத்துப் பசுக்களையும் தானம் அளித்ததாக ஸ்ரீவால்மீகி கூறுகிறார்.

கண்ணனாய் அவதரித்தபோது ஸ்ரீஹரி மாடுகள் மேய்க்கும் கோவலனாகப் பெயர் பெற்றார். கோவிலூர் என்று ஒரு திவ்ய க்ஷேத்திரத்திற்குப் பெயரே உண்டு. கிருஷ்ணாவதாரத்தில் பாலும் தயிரும் வெண்ணெய்யும் நெய்யும் பகவானுக்கு உகந்த உண்பொருள்களாக இருந்திருக்கின்றன. "பொன்னேய் நெய்யொடு பாலமுதுண்டு" என்றும், "கும்மாயத்தொடு வெண்ணெய் விழுங்கி குடத்தயிர் சாய்த்துப் பருகி" என்றும் பெரியாழ்வார் கூறுகிறார். (பெரியாழ்வார் திருமொழி 3–1–1, 3)

குன்றைத் தூக்கிக் கண்ணன் குடை பிடித்ததும் பசுக்களைக் காக்க! அவன் உரைத்த கீதையின் சிறப்பைச் சொல்லும் போது வேதங்கள் என்ற பசுக்களிடமிருந்து கோபாலன் கறந்த பால் தான் பகவத் கீதை என்பர். "ஸர்வோபநிஷதோ காவ: தோக்தா கோபாலநந்தந:, பார்த்தோ வத்ஸ:, ஸுதீர் போக்தா துக்தம் கீதாம்ருதம் மஹத்" என்பது ஆன்றோர் வாக்கு.

பசு எதிரில் வந்தால் காரியம் ஜெயம் என்பது சகுன சாஸ்த்ரம். ஆண்முலை அறுத்தல் என்றும் கோஹத்தி என்றும் பசுவைக் கொலை செய்யும் பாவம் அழைக்கப்படுகிறது. இது பஞ்சமாபாதங்களில் ஒன்று. நாம் வாழும் பூமிக்கு ப்ருத்வீ என்று பெயர் வரக் காரணமாக இவ்வுலகை ஆண்ட ப்ருது என்ற மன்னன் பூமியை பசுவாக்கித் தான் பூமியின் வளங்களைக் கறந்தான் என்று ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது. பசுவைக் கொன்றால் என்ன தவறு? மாட்டிறைச்சி உண்டால் என்ன தப்பு? என்று விவாதம் நடத்தும் இந்துக்கள் இந்த விஷயங்களை யெல்லாம் சிந்தித்தல் நலம்.

இப்படி வைதிகச் சிறப்புமிக்க பசுவை பால் கறக்கும் கன்றுடன் வைதிக

அந்தணருக்கு தானம் செய்தாலும் வ்ருஷோத்ஸர்க்கம் என்று முன்பு சொல்லப்பட்ட காளைக் கன்றுகளை தானம் செய்தாலும் இறந்தவர்க்கு நற்கதி கிடைக்கும் என்று பெருமாள் கூறுகிறார். உயிரோடு வாழும் போதே தான் இறந்தபிறகு தனக்கு நற்கதி வேண்டும் என்று எண்ணி இப்படித் தானங்களைச் செய்தாலும் பலன் உண்டு என்பது திருமாலின் கருத்து. இந்த இடத்தில் ஏகாதிஷ்ட ச்ரார்த்தம், ப்ருத்தியாடை மீது செம்புவட்டில் வைத்து அதில் சாளக்ராமம் வைத்து தானம் செய்தல், நெய்யூற்றிய வெண்கல பாத்திரத்தை தானம் செய்தல், எள், இரும்பு, பொன், பருத்தி, உப்பு, நவதானியங்கள் முதலியவற்றை தானம் செய்தல், மிகுந்த பணத்தைத் தட்சிணையாகக் கொடுத்தல் முதலியவற்றைப் பற்றியும் பெருமாள் கூறுகிறார். இவற்றின் நுட்பமான ஆசார விதிகளைச் சம்பந்தப்பட்ட புரோகிதர்களைக் கேட்டுத் தெரிந்து கொள்க.

அடுத்த கட்டமாக எமலோகத்துக்குப் போகும் வழி எப்படியிருக்கும் என்று நமக்கு ஒரு சொல்லோவியம் தருகிறார் ஸ்ரீமந் நாராயணன். நாம் வாழும் இந்த பூமிக்கும் எமதர்மராஜனுடைய எமபுரிக்கும் இடையிலே ஊனக் கண்ணுக்குத் தெரியாத நுட்பமான ஒருபாதை உள்ளது என்றும், அந்தப் பாதையின் நீளம் பல ஆயிரக்கணக்கான மைல்கள் என்றும் அவர் கூறுகிறார். 86 ஆயிரம் காதம் என்பது அவரது கூற்று. உடலை விட்டுப் பிரிந்த ஆத்மாவை எமனுடைய பணியாளர்களை யமனுடைய உத்திரவின் படி "பாசம்" என்ற பெயருள்ள ஒரு அறுபடாத கயிற்றினால் கட்டி, காற்று வடிவமான ஒரு தேகத்தில் அடைத்து இழுத்துக் கொண்டு செல்வார்கள். இப்படி இழுத்துக் கொண்டு போகப்பட்ட ஆத்மா யமதர்மனுடைய முன்னிலையில் நிறுத்தப்படும். ஆவனை ஏற இறங்கப் பார்த்து "இவனை மீண்டும் இவன் வீட்டிலே கொண்டு போய் விட்டு, இன்றிலிருந்து 12 ஆம் நாள் கழிந்த பிறகு கொண்டு வாருங்கள்" என்பான் எமன்.

அதே அளவு தூரம் மீண்டும் பயணம் செய்து அந்த ஜீவன் கொணரப்பட்டு சுடுகாட்டிலே தன் சிதைக்கு 10 முழு உயரத்திலே நிறுத்தப்படும். பற்றி எரியும் தன் உடலைப் பார்த்து தன் உடல் அழிகிறதே என்று ஓலமிட்டு அழும். உடல் முழுதும் எரிந்தவுடன் அந்த ஜீவனுக்கு, பிண்டத்தால் ஆன ஒரு உடல் உருவாகிறது. அது என்ன என்பதை பெருமாள் விளக்குகிறார். அதாவது இறந்தவனின் மகன் பிண்டம் போடுதல் என்ற சடங்கை புரோகிதர் ஆலோசனைப்படிச் செய்கிறான். அப்படிச் செய்யும் போது முதல் நாள் போடும் பிண்டத்தால் சிரசு, இரண்டாம் நாள் கழுத்தும் தோள்களும், மூன்றாம் நாள் மார்பு, நான்காம் நாள் வயிறு, 5ஆம் நாள் உந்தி, 6ஆம் நாள் பின் பகுதி, 7ஆம் நாள் ஆசனவாய், 8ஆம் நாள் தொடைகள், 9ஆம் நாள் கால்கள், 10ஆம் நாள் பரிபூர்ண சரீரம் என்று பிண்ட சரீரம் உருவாகிறது.

இந்தப் பிண்ட சரீரத்தோடு தான் வாழ்ந்த வீட்டின் வாசலில் நின்று கொண்டு உள்ளே போவோரையும் வருவோரையும் பார்த்து பசிதாகத்தால் அலறிக் கொண்டும் கூவிக் கொண்டும் கெஞ்சிக் கொண்டும் நிற்பான். ஆனால் அந்தக் குரல் மக்கள் காதில் விழாது. 11ஆம் நாளிலும் 12ஆம் நாளிலும் தன் மகனால் பிராம்மணர்கள் மூலமாக கொடுக்கப்பட்டவற்றை உண்டு, 13ஆம்நாள் யமனுடைய பணியாளாகளால் இழுத்துக் கொண்டு போகப்படுவான். தன் வீட்டை திரும்பிப் பார்த்துக் கொண்டே கதறியழுது கொண்டு யம லோகத்தை அடைவான். அப்பொழுது அவன் அடையும் அனுபவங்கள் அதி பயங்கரமானவை. (தொடரும்)